| | | |
|---|---|---|
| **பாடம்** | : | நன்னெறிக் கல்வி |
| **வகுப்பு** | : | 2 |
| **திகதி** | : | 1.11.2021 |
| **பண்புக் கூறு** | : | விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை |
| **க.தரம்** | : | 14.2 குடும்பத்தினரிடம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை விளக்குவர். |
| **அடைவுநிலை** | : | 2 |

**கட்டளை : கொடுக்கப்பட்டுள்ள சூழல்களில் நீங்கள் எவ்வாறு விட்டுக்கொடுப்பீர்கள் என தெரிவு செய்க.**

1. வீட்டில் ஓர் ஆப்பிள்தான் இருக்கிறது. நீங்களும் உங்கள் தம்பியும் அதைச் **சாப்பிட** விரும்புகிறீர்கள்.

2. நீங்களும் உங்கள் அண்ணனும் ஒரே அறையில் தங்குகிறீர்கள். நீங்கள் உறங்கப் போகும் வேளையில் அண்ணன் தேர்வுக்குப் படிக்கிறார்.

3. உங்கள் சித்தியின் மகன் உங்கள் வீட்டில் தங்குவதற்கு வந்திருக்கிறார். உங்கள் அறையில் ஒரு கட்டில்தான் இருக்கிறது.

4. நான் படித்துக் கொண்டிருந்தேன். உறவினர்கள் சத்தமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

5. நீங்களும் அக்காளும் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்பொழுது உங்கள் தங்கையும் விளையாட எண்ணுகிறாள்.

LIVEWORKSHEETS